1. ரூ. 49 ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 13 ஊதிய உயர்வும், ரூ. 50 முதல் ரூ. 99 வரை ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 23 ஊதிய உயர்வும், ரூ. 100-க்கு மேற்பட்டு ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 28 ஊதிய உயர்வும் அளிக்கப்படும்.

2. இந்த ஒப்பந்தம் ஏறக்குறைய 2,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 210 நிறுவனங்களை கட்டுப்படுத்தும். இந்த ஒப்பந்தம் 1—3—74 முதல் ஏற்பட்டு, ஒரு வருடம் வரை நீடிக்கும்.

தொழிலாளர்கள் அனைவரும் வேலையில் சேர்ந்தனர்.

(ஆ) மேட்டூர் பியர்சல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அலெக்ஸாண்டர் திரட் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, மேட்டூர் பியர்சல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அலெக்சான்டர் திரட் தொழிற்சாலையில் பணி புரியும் 160 தொழிலாளர்கள் 4—2—1974-ம் நாள் முதல் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்வது பற்றியும், அதன் தொடர்பாக சேலம் லேபர் ஆபிசர் சொன்ன ஆலோசனையை கேட்காமல் மேற்படி நிர்வாகத்தினர் பாதி தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதாகக் கூறுவதால் மூன்று தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவது பற்றியும் இதனால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலை பற்றியுமான அவசரப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தை நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணையில் 160 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற 'அலெக்ஸாண்டர் திரட் கம்பெனி' மேட்டூர் அணையில் உள்ள மேட்டூர் பியர்செல் கம்பெனியின் ஒரு பிரிவு ஆகும்.

நான்கு சங்கங்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட ஒரு கூட்டு செயற்குழுவின் மூலம் தொழிலாளர்கள் ஒரு கோரிக்கைப் பட்டியலை நிர்வாகத்தின் பரிசீலனைக்கு கொண்டு வந்தனர்.

1974 மார்ச் 27] *[திரு. க. இராசாராம்]*

நிர்வாகத்தினர், சங்கங்களுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி, 20 நாட்களுக்கு ஒரு நாள் விதம் விடுப்பு அனுமதி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மட்டும் ஒத்துக் கொண்டு சமரசம் செய்து கொண்டனர். மற்ற கோரிக்கைகளைப் பற்றி பல தடவை நேரடியாக இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடந்தும் ஒரு சமரச முடிவும் எடுக்கப்படவில்லை.

அதன் விளைவாக 4—2—74 நாள் முதற்கொண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சேலம், தொழில் துறை அலுவலர் சம்பந்தப்பட்ட கட்சியினரை 5—3—1974 அன்று சமரசப் பேச்சு வார்த்தைக்காக வரும்படி அழைப்பு விடுத்தார்.

இதற்கிடையில் நிர்வாகம் 88 தொழிலாளர்களை 5—4—74 முதல் ஆட்குறைப்பு செய்யும் பொருட்டு ஆட்குறைப்பு அறிவிப்பு வழங்கியது.

1973 ஆம் வருடம் ஜனவரித் திங்கள் 31 வரை ரூபாய் 25 லட்சம் நட்டம் ஏற்பட்டதால் சிக்கனமாக இயங்காத பிரிவுகளை நிறுத்தி விடவும், மற்ற வேலைகளில் வேலைப் பளுவினை சீராக்கவும் நிர்வாகம் தீர்மானித்தது.

அதன்படி 1974 ஆம் வருடம் மார்ச் திங்கள் 5 ஆம் நாள் மாலை சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு சமரசப் பேச்சு வார்த்தை நடக்க இருந்தது. ஆனால் அன்று முற்பகலிலேயே நிர்வாகத்தினர் ஆட்குறைப்பு நஷ்ட ஈட்டுத் தொகையை பண அஞ்சல் மூலம் தொழிலாளர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

மேற்சொல்லப்பட்ட சங்கங்கள் இந்த ஆட்குறைப்பு பழிவாங்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டது என்று குற்றம் சாட்டினர். சங்கங்கள் தொழிற்சாலையின் உள்ளேயே சத்தியாக் கிரகம் செய்ததாக நிர்வாகத்தினர் தொழிலாளர் துறை ஆணையருக்கு தந்தி மூலம் தெரிவித்தனர்.

மேலும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இத்தகராறு களில் முடிவு காணும்படி கோயம்புத்தூர் துணைத் தொழிலாளர் ஆணையாளருக்கு கட்டளையிடப்பட்டது.

துணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தை முறிந்துபட்ட நிலையில் சென்னை வந்து இங்கே உள்ள துணை லேபர் கமிஷனர் முன்னிலையில் தற்போது பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன் : இந்த தொழிற்சாலை மிக சிறிய தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலையில் போன நவம்பர் மாதத்தில் கூட புதிதாக ஆளை எடுத்து இருக்கிறார்கள். இங்கே தொழிலாளிகளின் சம்பளம் 2½ ரூபாய், 3 ரூபாய், 3½ ரூபாய் என்ற நிலையில் இருப்பதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து வேலை நிறுத்தம் செய்கிறபோது மானேஜ்மெண்ட் சைடிலிருந்து 44 ஆட்களை அதிகமாக இருப்பதால் வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன் வைத்தால், இது தொழிலாளர்களை பழி வாங்குவது என்றல்லாமல் வேறு எந்த நியாயமும் கற்பிக்க முடியாது.

ஆகவே, அப்படிப்பட்ட நிர்வாகம் செய்கிற தவறான காரியத்திற்கு கொடுமையை தடுத்து நிறுத்தி தொழிலாளர் உரிமையை பாதுகாக்க இந்த அரசாங்கம் உறுதியாக பணியாற்றுமா என்பதை கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் ஏற்கனவே அறிக்கையில் சொன்னதுபோல் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதில் சுமுகமான முடிவு ஏற்படும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் ஆணையர் அவர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுவார் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் இருக்கும் திரு. துரைமுருகன் அவர்களை அது சம்பந்தமாகப் பேரவையின் நிகழ்ச்சிகளை நடத்தித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பேரவைத் தலைவர் தம் இருக்கையை விட்டு எழுந்து பேரவையில் வேறொரு இருக்கையில் அமர்ந்தார். திரு. துரைமுருகன் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்தார்.